# திருக்குறளில் நீரியல் மேலாண்மை

7

**மு.முவின்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**ஆர் வி எஸ் கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641402, தமிழ்நாடு, இந்தியா**
**மின்னஞ்சல் : muvinm97@gmail.com,**

**ஆய்வுச்சுருக்கம் :**

நீர் உயிர்களின் பிறப்புக்கும், இல்லாது போனால் இறப்புக்கும் காரணமாகும் மிக முக்கியமான உயிர்க்காரணியாகும். இயற்கையின் கூறாம் நீரின் துணையின்றி, மனிதனால் இப்புவியில் நிறைவாக வாழ இயலாது. அடிப்படை உயிரியல் மற்றும் உடலியல் தேவையான நீரின் மீதான தேவை அதிகமாகும்போது, அது செல்வத்தைப் போல் சேர்த்துவைக்கப்பட வேண்டியது என்ற பற்றாக மாறிவிடுகிறது. இதே நீர் இல்லாது போகும்போது இந்தப் பற்று வெறியாக மாறிவிடுகிறது. உலகின் பல பகுதிகளில் நீர் சார்ந்த தேவைகளில் குறைபாடுகள் ஏற்படும் போது, பெரும் போராட்டங்கள் விளையத் தொடங்குகின்றன. வெறுமனே உயிரினங்களின் தாகம் தீர்ப்பதற்கு மட்டுமன்றி, மனித சமூகத்தின் வாழ்வியல் ஒழுக்கத்திலும் நீரின் பங்கு நிறைந்திருக்கிறது. மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு நீர் அவசியமென்ற நிலையில், இயற்கையில் அருவியாக வழிந்தோடும் நீர் அழகுமிக்கதாகவும், இன்றைய காலங்களில் கட்டுக்கடங்காது கொட்டித் தீர்க்கும் மழை துன்பத்திற்குக் காரணமாகவும் மாறிவிடுவதைக் காணமுடிகிறது. இத்தகைய நீரின் அருமைகளை உலகப் பொதுமறையாம் திருக்குறளில் தெள்ளிதின் உணரலாம். திருக்குறளின் அதிகார அமைப்பு முறைப்படி, முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து என்றும், அதன் பின்னர் வான்சிறப்பு என்றும், அதன் பின்னர் நீத்தார் பெருமை என்றும் செல்கிறது. கடவுள் எனும் வழிபாட்டுக் கடமை கடந்த, திருக்குறளின் இரண்டாவது அதிகாரமாக வான்சிறப்பு என்ற தலைப்பில் முழுக்க முழுக்க நீரைப் பற்றிய செய்திகளையே வள்ளுவர் கூறியுள்ளார். மேலும், வான் சிறப்பு என்ற அதிகாரத்தின்கீழ் நீரின் பெருமை அமைந்திருப்பது ஆராய்தற்குரியது. உலக வாழ்வின் உச்சபட்ச அறம், வாழ்வியல் நெறியொடு கூடிய வாழ்வாங்கு வாழ்தல் என்று அழியாத அறங்கள் உரைக்க எழுந்த திருக்குறள் என்னும் அறநூல் வலியுறுத்தும் நீரியல் மேலாண்மையே ஆராய்தலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்** : இயற்கை, நீர், மேலாண்மை, மனிதன், சமூகம், நதி, கடல்

**முன்னுரை :**

இயற்கை மனிதனை பக்குவப்படுத்தும் ஓர் அரிய கொடை. வாழ்க்கையை இயற்கையின் பார்வையில் அணுகுபவர்களால், இயற்கையை முழுதாக ரசிக்க முடியும். இதனைப் பற்றிய வெ

இறையன்பு அவர்களின் கூற்று பின்வருமாறு,

**"போராட்டம் வாழ்க்கை என எண்ணுபவர்களால் வாழ்வில் வீசுகிற தென்றலையும், மழைச்சாரலையும், கலைப்பொருட்களையும் ரசிக்க முடியாது"** [1]

எனும் கூற்றிலிருந்து இயற்கையும், வாழ்க்கையும் இணைந்து இருந்தால் அந்த வாழ்வு இன்பத்தைத் தரும் என்பதை அறிய முடிகிறது. இத்தகைய இயற்கையோடு இணைந்து நீர். மண்ணில் உயிர்கள் உயிர்ப்பதற்கும், செழிப்பதற்கும் மழை தரும் நீர் அவசியமாகிறது. எல்லோருக்கும் எல்லாம் உண்டு என்ற நிலையில் எங்கும் நிறைந்திருக்கும் நீரால் உலகின் நிம்மதி காப்பாற்றப்படுகிறது. ஆனால், நீரால் சூழ்ந்த உலகில், மனிதனின் அதீத ஆசைகளினால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும்போது சுயநலத்தின் வெளிப்பாடாய் நாடுகளுக்கிடையே நீரால் போர்களும் மூளும் அபாயம் இருத்தலை எளிதில் கடந்து செல்ல இயலாது. அறங்களைப் போதிப்பது அற நூல்களின் இயல்பு. அவ்வகையில் திருக்குறள் உரைக்கும் நீரியல் செய்திகளை ஆராய்தலை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**நீரியல் மேலாண்மை :**

பொதுவாக அறிவு, உணவு, உடை போன்ற எந்த ஒன்றையும் பெறுதல் அல்லது சேமித்தல் மற்றும் நிர்வகித்தல் அல்லது பயன்படுத்தல் மேலாண்மை எனப்படுகிறது. மனிதனைத் தவிர, விலங்குகள், பறவைகள் நீரைச் சேமித்து வைக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால், நாகரீகத்தின்பால் நிலையுண்ட மனிதனோ தனது அடிப்படைத் தேவைக்கு நீரைச் சார்ந்திருப்பதால் அதன் சேமிப்பும் அவசியமாகிறது. கற்கால மனிதனாய் இருந்து நாகரீக மனிதனாய் வாழத்தலைப்பட நினைத்தவன், ஆற்றங்கரை வாழ்வியலை நீரை மையமிட்டே அமைக்க வேண்டிய இருந்திருக்கும். மொழி, கலை, உணவு உற்பத்தி (வேளாண்மை) என நனிநாகரீகமடைந்த மனிதனுக்கு விவசாயத்திற்கு வேண்டி சேமித்து மேலாண்மை செய்ய வேண்டிய தொடக்க நிலை விவசாயத்தில் ஆரம்பமானது என்பதை அறியலாம். இதனை

**"மனிதன் மழையைத்தான் முதலில் சேமித்தான். எனவே பெய்யா நேரத்திலும் இருப்பில் இருந்த நீரைக் கொண்டு இயற்கையை அனுசரித்து வேளாண்மை செய்ய முடிந்தது. "** [2]

என்ற வெ. இறையன்பு அவர்களின் வரிகள் நிறுவுகின்றன.

எது எப்போதும் கிடைக்காமல் அரிதாகக் கிடைக்கிறதோ இயல்பாகவே அது சேமிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உயிர்களின் வாழ்தலுக்கு, மழை இயற்கை தரும் வரம்.

**துப்பாய தூஉம் மழை :**

மேகத்திலிருந்து நீர்த்துளிகள் மழையாக இடையறாது வழங்கிவருவதால் மழை அமிழ்தம் என்று அழைக்கப்படுகிறது என்பதை

**" வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று "** [3]

இக்குறள் வெளிப்படுத்துகிறது. வானிலிருந்து பொழியும் மழை மண்ணை வளப்படுத்துவதுடன், மனித வாழ்வையும் உணவின் மூலம் செம்மைபடுத்துகிறது. உண்பார்க்கு உணவாகவும்,

உணவாக்கவும், பயன்படும் நீர் என்பதை,

**“ துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**

**துப்பாய தூஉம் மழை ” [4]**

மேற்குறிப்பட்டுள்ள குறள் விளக்குகிறது. தேவலோகத்தில் அமிழ்தம் உண்பவர்கள் அழியாத் தன்மை பெற்றவர்கள் என்ற கருத்தைப் பொருத்தி, வானத்திலிருத்து வரும் மழையே அமிழ்தம் போல் மண்ணில் உயிர்களின் அழியாத் தன்மைக்குக் காரணம் என்பதைச் சுட்டுகிறது. வானத்து தேவர்கள் அமிழ்தம் உண்டதால் நித்தியமைந்த புராணச் செய்தியையும், மண்ணில் கிடைக்கும் வானத்து அமிழ்தமாம் நீரினைப் பருகாது போனால் உயிர்கள் அழிந்துபோகும் என்ற கருத்தையும் ஒப்புநோக்கல் நலம். இதை மெய்ப்பிக்கும் விதமான வெ. இறையன்பு அவர்களின் கூற்று பின்வருமாறு,

**“மண்ணுக்கு அமுதம் மழையே. அது வானிலிருந்து மரங்களின் மீது பொழியும் தாய்ப்பால். மேகங்கள் சூல்கொண்டால் மட்டுமே சுரக்கும் அந்த ஊட்டச்சத்தால் உயிர்கள் செழிக்கும். ” [5]**

வள்ளுவரின் நீரியல் சிந்தனையில் முதன்மையாக இருப்பது நீரை அமிழ்தம் என்று போற்றி அதனைச் சிறப்பிப்பதாகும். ஏனெனில் இவ்வாறு கிடைத்தற்கரிய அமிழ்தமென்று என்று உரைத்தால்தான் அதன் மேலாண்மையில் மானிடர்கள் கவனம் செலுத்துவர் என்ற நோக்கில் இதனை அறியலாம்.

**விண்ணின்று பொய்ப்பின் :**

விவசாயம் என்பது தமிழர் தம் தொழிலாகக் காலம் காலமாக இருந்து வருகிறது. மருத நிலம்வ விவசாயத்திற்கான பண்படுத்தபட்ட குடி நிலையாகவே இருந்துள்ளது என்பதற்கு சான்றுகள் சங்க இலக்கியங்களில் இருந்து கிடைக்கின்றன. வேளாண்மையில் ஈடுபடும் மக்கள், நீரைத் தன் வீட்டுத் தேவைக்கும், விவசாயத் தேவைக்கும் பெருக்கி மேலாண்மை செய்தல் நோக்கத்தக்கது. உழவர்கள் நீரின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை, வழிபாட்டை இன்றும் அணைகளில் இருந்து நீரைத் திறக்கும்போது பூக்களைத் தூவி வணங்கி வாழ்த்துவதில் இருந்து புரிந்து கொள்ளலாம். விவசாயத்தை வாழ்வியலோடு இணைத்துச் செம்மையாக வாழும் உழவர்கூட மழையின்றிப் போனால் உழமாட்டார் என்பதை,

**“ ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**

**வாரி வளங்குன்றிக் கால் ” [6]**

என்ற குறளில் வள்ளுவர் உணர்த்துகிறார். மழை பெய்யாது பொய்த்துப் போனால், உணவு உற்பத்தி செய்யும் உழவர்கள் விவசாயம் செய்யமாட்டார்கள் அதன்பொருட்டு உணவு உற்பத்தியே இல்லாது போனால் உயிர்களை பசி எனும் நோய் வாட்டும் என்று கூறுவதை

**“ விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**

**உள்நின்று உடற்றும் பசி ” [7]**

மேற்குறிப்பட்டுள்ள குறளில் மூலம் உணரலாம். விவசாயமும் நீர் மேலாண்மையும் பிரிக்க இயலாதது என்பதை

**“ மழையே பாசன நீராக பயிர்களுக்குப் பயன்படுகிறது. நேரடியாக அணையில் இருந்து கால்வாய்கள் மூலம் வாய்க்காலில் சென்று வயல்களைக் குளிர்விப்பது கொஞ்சம்தான் என்றாலும் அது ஏரிகளிலும், குளங்களிலும், தாங்கல்களிலும் சேமிக்கப்பட்டு இன்னும் சில மாதங்கள் பாசனத்திற்குப் பயன்படுகின்றன. ”** [8]

என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன.

**நீரின்றி அமையாது :**

நீர் சூழ்ந்த உலகில், நீரைப் போன்ற எளிமையானதும் ஒன்றுமில்லை. நீரைப் போன்று அத்தியாவசியமான ஒன்றுமில்லை. எந்த உயிருக்கும் நீரும், நீர் சார்ந்த தேவைகளும் இருந்து கொண்டே இருக்கின்றன. குளித்தல், சமைத்தல், தாகம் தணித்தல், சுத்தம் செய்தல், போன்ற மனித வாழ்வின் ஒழுக்க நெறிகளும் நீரை மையமிட்டே சுழல்கின்றன. இதைத் தான் வள்ளுவர்,

**“ நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்றி அமையாது ஒழுக்கு ”** [9]

என்று உணர்த்தியிருக்கிறார். மேலும் நீர் தமிழர்களின் வாழ்வில் மிகப் புனிதமான ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் அடையாளமாக இன்றும், எந்தக் கோயிலில் குடமுழுக்கு நடைபெற்றாலும் கும்பக்கலசத்திற்கு நீரால் பூசைகள் நடத்தப்பட்டு, பின்னர் தெய்வங்கள் உறைவதாக நம்பப்படும், புனித நதிகளில் அல்லது நீர்நிலைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட நீர் பக்தர்களுக்குத் தெளிக்கப்படுகிறது. அதாவது நீரின் மூலமாக தெய்வசக்தி கடத்தப்படுகிறது என்பதனை,

**“தெய்வங்களின் இடப்பெயர்ச்சிக்கு நீர் ஓர் ஊடகமாக அமைகின்றது என்பதும் ஒரு நம்பிக்கையாகும் ”** [10]

எனும் கருத்து உறுதிசெய்கிறது. இத்தகைய நீரைச் சேமிப்பதில் இருந்து தவறினால், தானம், தவம் தங்காது போவதுடன், இறைவனுக்குச் செய்யும் பூசனைகளும் செல்லாது போகும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்

**எல்லாம் மழை :**

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்பது வள்ளலாரின் உச்சபட்ச உயிர்நேயம். பயிரின் வாட்டத்தை மட்டுமல்ல, எந்த உயிரின் வாட்டத்தையும் நீரினால் மட்டுமே போக்க முடியும் என்பது நீரின் குறைந்தபட்ச எதார்த்தம். உலகில் சரியாகப் பொழிந்து நன்மையையும், பெய்யாது பொய்த்துத் துன்பத்தையும் தரவல்லது மழை மட்டுமே என்பதை,

**“ கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை. ”** [11]

என்ற குறளில் வள்ளுவர் வலியுறுத்துகிறார். கொடுக்கின்ற மழை, சில நிலைகளில் கெடுக்கவும் செய்கிறது. திருவள்ளுவரின் இதே நீரியல் சிந்தனை, மற்றொரு அறநூலான கபிலரின் இன்னா

நாற்பது என்ற நூலிலும் இடம்பெற்றுள்ளது. அதாவது மழைவளம் குன்றி, மழை பொய்த்துவிட்டால், உலகம் வளமின்றி வறுமையில் வாட நேரிடும். பருவத்தில் பெய்யும் மழையே சிறந்தது. அதுவே மண்ணுக்கும் மக்களுக்கும் உகந்தது. பருவம் கடந்து வரும் மழையோ அல்லாது பெய்யாது பொய்த்துப் போகும் மழையோ உலக மக்களுக்குத் துன்பத்தைத் தரும். இதை,

**“ மாரிவளம் பொய்ப்பின் ஊர்க்கு இன்னா ”** [12]

**“ எழிலி யுறைநீங்கி னீண்டையார்க் இன்னா ”** [13]

இன்னா நாற்பதின் இரண்டு பாடல்களின் வரிகள் மேகக் கூட்டம் நீரைப் பொழியாததாயின் உலகத்து மக்கட்கெல்லாம் துன்பம் என்கின்றன. இன்பமோ, துன்பமோ நீர் சார்ந்த தேவைக்கான சூழலில் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதற்கு சான்றாக பின்வரும் கூற்றினைக் கூறலாம்.

**“ இன்று சுமார் 300 ஆறுகள் நாடுகளின் தேசிய எல்லைகளைக் கடந்து பாய்ந்து கொண்டிருக்கின்றன. உலக மக்கள் தொகையில் 40 விழுக்காட்டினர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் கைநனைக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலேயே வாழ்கின்றனர். பல்வேறு மொழி, பண்பாட்டுப் பாரம்பரியங்களை ஒருங்கிணைத்துப் பாயும் இந்த நீர் ஆதாரங்களினுள்ளே போர் அபாயத்தையும் தாண்டி அமைதிக்கும் ஒத்துழைப்புக்குமான மெல்லிய இழையோடிக் கொண்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை. ”** [14]

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கூற்றானது, நீர் மிக அவசியத் தேவை என்பதால், போரின் தூண்டுதலுக்கும், இதே நீரின் அவசியத்தன்மை கருதி உளவியல் ரீதியான சிந்தனையில் ஒருவகையில் இந்த நீரே அமைதிக்கான காரணமாகவும் அமைகிறது என்பதை நிறுவுகிறது. உலகம் முழுவதும் சூழ்ந்துள்ள நீரை, உடலில் நிறைந்துள்ள நீரை மனித சமூகம், உயிர், உணவு, ஒழுக்கம் போன்ற காரணங்களுக்காக மேலாண்மை செய்தல் அவசியம் என்பதை குறள்வழி தெள்ளிதின் உணர முடிகிறது.

**முடிவுரை :**

வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் வானில் வலம் வரும் சூரிய சந்திர, நட்சத்திரங்களை ஒதுக்கி நீரை மட்டுமே வள்ளுவர் முதன்மைப்படுத்தியதில் இருந்து நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். மழையின்றிப் போனால், விவசாயம் நடைபெறாது. எனவே உணவு உற்பத்தியும் இல்லாது உயிர்கள் பசியால் வாடும் நிலை வரும் என்கிறார் வள்ளுவர். மழை பருவம் தவறாது பெய்தால், அது இன்பத்தைத் தருவதாகவும், மழை பொய்த்துப் போனால் உலகத்து மக்கட்கெல்லாம் துன்பத்தைத் தருவதாகவும் அமைந்துவிடுகிறது. நீரின்றிப்போனால் உலகில் ஒழுக்கம் குன்றிப்போகும் எனவே, வாழ்வியல் அறத்திற்கும் நீர்மேலாண்மை அவசியம் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**ஆய்வில் கண்ட முடிவு :**

வான்சிறப்பு என்பதே மழையின் சிறப்பு. திருவள்ளுவர் மழை பொய்த்தால் வரும் பாதிப்புகளை ஆழமாக வான்சிறப்பில் வலியுறுத்துவதன் மூலம் நீரியல் மேலாண்மையில் கவனம்

செலுத்த வேண்டிய தேவையை மறைமுகமாகப் பதிவுசெய்துள்ளார். மேலும் உலகில், உயிர், உணவு, ஒழுக்கம் என்ற மனித வாழ்வின் வாழ்வியல் சுழற்சிக்கு நீர் மேலாண்மை அவசியம் என்பதை வெளிக்காட்டியுள்ளார்.

**அடிக்குறிப்புகள் :**

1. இறையன்பு வெ, வாழ்க்கை, ப.14
2. இறையன்பு வெ, மழை, ப.2
3. ஹெலினா தே, திருக்குறள் புதிய உரை, ப.9
4. மேலது, ப. 9
5. இறையன்பு வெ, மழை, ப.1
6. ஹெலினா தே, திருக்குறள் புதிய உரை, ப.9
7. மேலது, ப. 9
8. இறையன்பு வெ, மழை, ப.3
9. ஹெலினா தே, திருக்குறள் புதிய உரை, ப.10
10. பரமசிவன் தொ, அறியப்படாத தமிழகம், ப. 21
11. ஹெலினா தே, திருக்குறள் புதிய உரை, ப.10
12. வேங்கடசாமி நாட்டார் ந மு, இன்னா நாற்பது உரை, ப.30
13. மேலது, ப. 41
14. ஐங்கரநேசன் பொ, 2010, ஏழாவது ஊழி, ப. 198

**துணைநூற்பட்டியல் :**


1. இறையன்பு வெ, மழை, நியூ செஞ்சரி புக்ஹவுஸ், மூன்றாம் பதிப்பு, 2022
2. இறையன்பு வெ, வாழ்க்கை, விஜயா பதிப்பகம், 2019
3. ஐங்கரநேசன் பொ, ஏழாவது ஊழி, சாளரம் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 2010
4. பரமசிவன் தொ, அறியப்படாத தமிழகம், காலச்சுவடு பதிப்பகம், இருபத்து மூன்றாம் பதிப்பு, 2022
5. வேங்கடசாமி நாட்டார் ந மு(உ.ஆ), இன்னா நாற்பது உரை (மூஉ ), சாரதா பதிப்பகம், ஆறாம் பதிப்பு, 2011
6. ஹெலினா தே (உ.ஆ), திருக்குறள் புதிய உரை, விதை வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 2016